**வலப்பனை பிரதேச சபை - 2013**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பிரதேச சபை மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கை

பிரதேச சபை மீளாய்வாண்டிற்குரியதாக சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2012 நவம்பர் 21 ஆந் திகதி சபைக்குக் கையளிக்கப்பட்ட தகனக்கூடத்தின் பெறுமதியான ரூபா 7,647,798 தொகை மற்றும் கழிவுப் பொருள் மீள் சுழற்சி நிலையத்தின் பெறுமதியான ரூபா 2,774,590 தொகை என்பன நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையினால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 10,422,388 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் மூலம் 2013 செப்தெம்பர் 11 ஆந் திகதி சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 3,450,574 பெறுமதியான டிபர் வாகனத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான ஆயுர்வேத மருந்து இருப்பின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 06 நிலையான சொத்து விடயங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் படி மீதிகளின் ரூபா 38,960,851 கூட்டுத்தொகையான கணக்குகளுக்குரிய உபயோகப் பதிவேடுகளின் படி ரூபா 37,297,918 கூட்டுத்தொகையான மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 1,662,933 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.5 தொங்கல் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 5,497 ஆக இருந்ததுடன் அந்த மீதிக்கான காரணத்தைப் பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 பெறவேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 17,216,167 கூட்டுத்தொகையான பெறவேண்டிய கணக்கு மீதிகளின் காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.7 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 120,847,411 கூட்டுத்தொகையான செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.8 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 22,447,606 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
| --- | --- | --- |
| (அ) | இலங்கைக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவு | பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்ட பின் இடமாற்றம் பெற்றுச் செல்லல், சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த மற்றும் விபரங்களை இனங்காண முடியாத 75 ஊழியர்களிடமிருந்து அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 312,600 கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 17. | 2012 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட 500 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,991,713 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,997,173 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | ------------------- | ------------- | ------------- | ------------- |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| | | (000) | (000) | (000) |
| I. | வீதவரியும் வரியும் | 3,581 | 1,991 | 1,590 |
| II. | வாடகை | 4,316 | 2,150 | 2,166 |
| III. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,609 | 1,609 | 0 |
| IV. | ஏனைய வருமானம் | 5,956 | 3,870 | 2,086 |

**2.2.2 வாடகை**

(அ) சபைக்குச் சொந்தமான 18 கடைகளை வாடகைக்கு வழங்கியதால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,062,600 தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வலப்பனை மற்றும் றாகல நகரத்திலுள்ள இரண்டு பொது மலசலகூடங்களை வாடகைக்கு வழங்கியதால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 280,619 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமானம்**

2011 ஒக்தோபர் 06 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உப விதியின் மூலம் வலப்பனை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது எந்தப் பணமும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மத்திய மாகாண சபையிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 2,621,278 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 2,944,160 தொகையான முத்திரைக் கட்டணம் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கிடைத்திருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல் மதிப்பீடு**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பௌதீக மற்றும் நிதி செயலாற்றலில் காணப்படுகின்ற செயல்முன்னேற்ற அறிக்கை மற்றும் கட்டுப்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

(அ) பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி இலக்கம் 19 இன் பிரகாரம் பற்றுச் சீட்டுப்புத்தகங்கள் சபையின் செயலாளரின் பொறுப்பில் வைக்கப்பட வேண்டியிருந்ததுடன் அவைகளின் பாதுகாப்பு மற்றும் பாவனை தொடர்பாக அவர் தனிப்பட்ட பொறுப்புடையவராக இருக்கவேண்டிய போதிலும் இந்த அலுவலகத்தில் 11 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் காணாமல் போயிருந்தன. இந்த பற்றுச்சீட்டுப் புத்தகங்களிலிருந்து அறவிடக்கூடிய பணம் தொடர்பாக பரிசோதனைத் திகதி வரையிலும் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் ஏற்படக்கூடிய நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 09 வாகனங்கள் 2009 ஆம் ஆண்டின் பின்னர் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காப்புறுதி செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான CPQR-5184 ஆம் இலக்க முச்சக்கர வண்டிக்காக 2012 ஏப்ரல் 28 முதல் 2012 திசெம்பர் 19 வரையிலான காலத்தில் ஓட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் போது ரூபா 142,285 பெறுமதியான 879 லீற்றர் பெற்றோல் ஓட்டத்திற்காக அக்காலத்தில் வழங்கப்பட்டிருந்தது.

**3.3 செயற்பாடற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான பின்வரும் சொத்துக்கள் உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாது நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

| விடயம் | அளவு |
|---|---|
| வலப்பனை நகரத்தில் 03 கடைகள் | 03 |
| 109-9147 ஆம் இலக்க ஹொண்டா வகையின் மோட்டார் சைக்கிள் | 01 |
| 180 - 901 ஆம் இலக்க பஜாஜ் வகையின் மோட்டார் சைக்கிள் | 01 |
| 37-9482 உழவு இயந்திரம் | 01 |
| 290-1782 உழவு இயந்திரம் | 01 |
| 49-2003 குபோட்டா வகையின் உழவு இயந்திரம் | 01 |
| CPRV-3041 உழவு இயந்திர பெட்டி | 01 |
| KVVP-7564 சிறிய இயந்திர பெட்டி | 01 |
| கொங்கிரீட் கலவை பெரிய | 01 |

### 3.4 இனங்காணப்பட்ட நட்டம்

பிரதேச சபையில் காணாமல் போன 1270 ஆம் இலக்க அடியிதழ் புத்தகத்தில் (இலக்கம் 63451-63500) வரையான பற்றுச்சீட்டுக்கள் அடங்கிய) 63486 ஆம் இலக்க அடியிதழ் மூலம் சபையின் வருமானப் பரிசோதகரினால் அறவிடப்பட்ட ரூபா 6,000 தொகையான நிலுவை வியாபார வரி மோசடி செய்யப்பட்டிருந்தது. பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதாக 2014 யூன் 20 ஆந் திகதி தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

(அ) தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தில் மண்சரிவு உதவி மற்றும் சேவைப் பிரிவினால் செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்கு உசிதமற்ற தென அறிக்கையிடப்பட்ட நிலப்பகுதியொன்றில் சபையினால் அரசாங்கத்தினதும் ஆசிய மன்றத்தினதும் உதவிகளை பயன்படுத்தி ரூபா 7,184,832 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பதியபெலல்ல நீர் உத்தேசத்திட்ட முறைமையை திட்டமிட்டு தயாரித்தலின் வழுவின் காரணமாக முழுமையாக தோல்வியடைந்திருந்தது.

(ஆ) பதியபெலெல்ல நீர் உத்தேசத் திட்டத்திற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர் சான்றுப்படுத்திய ரூபா 1,179,096 வேலைப் பெறுமதியை விஞ்சி சபை செயலாளரின் கட்டளையுடன் அங்கீகாரமின்றி ரூபா 640,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான திட்டமொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கழிவுப் பொருட்கள் நில்தண்டாஹின்ன தம்பேகெலே மற்றும் றாகல லின்ஸ்டேல் வத்தை போன்று இடங்களில் போடப்பட்டிருந்தன.

### 3.7 மிகைக் கட்டணம்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பொறுப்புவாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட ரூபா 29,975 தொகையான மிகைக் கட்டணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் படி மதிப்பிடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடுசெய்த போது 07 வருமான விடயங்களில் 0.02 சதவீதம் முதல் 41.98 சதவீதம் வரையும், 07 செலவின விடயங்களில் 6.64 சதவீதம் முதல் 121.88 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 தீர்வு காணப்படாத பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பிரதேச சபை 10 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்